REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 2உ வெள்ளி (18—11—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 3உ சனி (19—11—55) [இதழ் 134

தி-கோ.-வில் கடிகாரம் தயாரிப்பு!

திருவனந்தபுரம், நவ. 16—

திரு-கொச்சி மாநில கைத்தொழில் இலாகா ஒரு கடிகாரம் தயாரித்துள்ளதாம். இக்கடிகாரம் மிக மலிவானது என்றும், அதே நேரத்தில் மிக உறுதியானது என்றும், நன்கு உழைக்கக்கூடியது என்றும் கூறப்படுகிறது.

இக்கடிகாரத்தில் 'மெயின் ஸ்பிரிங்' ஒன்றைத் தவிர இதர எல்லா உறுப்புகளும் நெய்யாற்றங்கரை-விளவங்கோடு சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசத்தைச்சேர்ந்த தொழிற்சாலையிலும் தொழிற்பள்ளிக்கூடத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

விடுதலை கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

போலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

மாணவிகள் மீது பிரம்படி

சைப்ரஸ் தீவில் விடுதலைக் கிளர்ச்சி வலுக்கிறது

நிகோசியா, நவ. 16—

சைப்ரஸ் தீவின் விடுதலைக்காக, தீவிலுள்ள நகரங்கள், கிராமங்கள் முழுவதிலும் கடையடைப்புகளும், வேலைநிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

அதனைத் தொடர்ந்து, ஒரு கிரேக்க சைப்ரஸ் வாசிக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை எதிர்த்து நேற்று முழுதும் நகரின் பல பாகங்களிலும் கண்டன ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

சுமார் 1,000 மாணவர்களை, அவர்கள் பிரிட்டிஷாருக்கு எதிராகக் குரல் எழுப்பிக்கொண்டு, முக்கிய வீதிகள் வழியாகச் சென்றார்கள் என்பதால், போலீசார் மடக்கிக் கொண்டு, தடி கொண்டு தாக்கியிருக்கின்றனர். அவர்களைக் கலைப்பதற்காகக் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

மாணவிகள் பலர் கண்டன ஊர்வலம் நடத்தியபோது அவர்களைக் கலைக்க போலீசார் பிரம்படி தந்திருக்கின்றனர்.

பிரம்படிபட்ட பின்னரும் 'சைப்ரசி'ற்கு விடுதலை வேண்டும் என்று குரல் முழக்கிக்கொண்டே மாணவிகள் சென்றிருக்கின்றனர்.

பிரம்படி பட்டதால் ஒரு மாணவியின் நெற்றி பிளந்து இரத்தம் ஒழுகியது.

நகரின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் தீவிரமாக நடைபெற்றிருக்கின்றன.

பூமிக்குள் புதையும் பஞ்சாப் நகரம்

அம்பாலா, நவ. 17—

கிழக்கு பஞ்சாப் மாநிலத்தின் பார்னுலா மாவட்டத்தைச் சேர்ந்த மத்யா எனும் நகரில், 8 வீடுகள் திடீரென பூமிக்குள் 8 அடி புதைந்து குப்புற வீழ்ந்தன என்று இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

இந்த நகரத்தை உதவி நீதிபதி நேரில் சென்று பார்வையிட்டிருக்கிறார்.

இந்த நிகழ்ச்சிக்கு இதுவரை காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. சென்ற கிழமையில், பூமிக்குள், 20 வீடுகள் 20 அடி ஆழத்தில் புதைந்தன. இந்த நகரத்திலிருந்து வெளியேறி விடுமாறு மக்கள் ஏற்கனவே எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கின்றனர்.

'தமிழர்கள் தனி நாடு கோருவதைத் தவிர வேறு வழி இல்லை'

மக்கள் சபை உறுப்பினர் சுந்தரலிங்கம் அறிக்கை

"எந்த நாகரீக மக்களும் கஷ்டப்படாமல் தமது சுதந்திரத்தையும், சுயமரியாதையையும் பாதுகாத்துக் கொண்டதில்லை; எனவே, இலங்கைத் தமிழர்கள் தங்கள் இலட்சியத்தை அடைவதற்கு எத்தகு கஷ்டங்களையும் அனுபவிக்கத் தயாராயிருக்கிறார்கள்.

"புத்த மத குருக்களே 'சிங்கள நாடு' நிறுவுவதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆகவே, தமிழரும் 'தனி நாடு' கோருவதைத் தவிர வேறு வழி இல்லை; அவ்வாறு ஏற்படும் தமிழ் நாடு, சம நிலையில், எஞ்சியுள்ள இலங்கையில், 'கூட்டு' ஏற்பாட்டில் சேரக் கூடும்,"

—என்று இலங்கை மக்கள் சபையின் சுயேச்சை தமிழ் உறுப்பினரான சுந்தரலிங்கம் இன்று விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

'சிங்களத்துடன் தமிழும் சம நிலையில் ஆட்சிமொழி ஆகவேண்டும்' என்ற கொள்கை மீது மறு தேர்தலுக்கு நின்று வெற்றிபெறும் பொருட்டு, வேண்டுமென்றே கூட்டங்களுக்கு வராமலிருந்து, சுந்தரலிங்கம், மக்கள் சபை உறுப்பினர் பதவியை இழந்துவருகிறார்.

மேலும் அவர் அந்த அறிக்கையில் கூறுவதாவது:—

"சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்க சிங்களவர்கள் உறுதி கொண்டிருக்கிறார்கள். தமிழுக்கு 'இடதுகை' உபசாரம் செய்து, அதனை வட்டார மொழியாக்க ஒதுக்கித் தள்ளுவதற்கு சிங்களவர் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

'இலங்கையில் சிங்கள நாடு நிறுவப்பட்டால் தமிழர்கள் தனி சுதந்திர நாடு கோறுவதைத் தவிர வேறு வழி இருக்காது."

வீடும், 30 ஏக்கர் நிலமும் உள்ள 'பிச்சைக்காரர்'!

லாகூர், நவ. 17—

புதிதாகத் திறக்கப்பட்ட 'ஏழைகள் இல்ல'த்தில், சேர்க்கப்பட்ட பெஷாவர் வீதிகளில் சுற்றிக்கொண்டிருந்த பிச்சைக்காரர்கள், அந்த இல்லத்தில் வசிக்க விரும்பவில்லை என்றும், அங்கிருந்து வெளியேறிவிடத் துடியாகத் துடிப்பதாகவும் கூறப்படுகிறது.

'ஏழைகளுக்கு உதவவேண்டும்' என்ற சர்க்காரின் நல்லெண்ணம் தன் விஷயத்தில் தவறானது என்றும், தான் ஏழை அல்லவென்றும் ஒரு பிச்சைக்காரன் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறானும்!

தனக்கு ஒரு வீடும், பயிரிடக் கூடிய 30 ஏக்கர் நிலமும் இருப்பதாயும், பிச்சை எடுப்பது தனது குடும்பத் தொழில் என்றும், தன் குடும்பத்தில் எவருமே எப்போதும் வேலை செய்ததில்லை என்றும், தான் விரும்புகிற ஒரு 'தொழிலை'ச் செய்ய தனக்குள்ள அடிப்படை உரிமையில் சர்க்கார் குறுக்கிடுவதாயும் அந்தப் பிச்சைக்காரர் தெரிவித்திருக்கிறார்.

இல்லத்தில் உள்ள மற்றொரு பிச்சைக்காரன், தன்னை அதிகாரிகள், 'ஏழைகள் இல்ல'த்தில் வைத்திருக்க முடியாது என்றும், ஏனெனில், தான் தினம் அரை டஜன் கோப்பை தேநீர் குடிப்பதாயும், மூன்று பாக்கெட் சிகரெட் பிடிப்பதாயும், அரை தோலா கஞ்சா உபயோகிப்பதாயும் கூறியிருக்கிறானும்!

வடநாட்டு பக்ரா அணைக்கட்டு

நங்கல், நவ. 17—

இந்தியாவின் மிகப் பெரியதும், உலகத்திலேயே இரண்டாவதுமான பக்ரா-நங்கல் அணைக்கட்டுத் திட்டத்தின் கடைசிக் கட்டமான பக்ரா அணைத் திட்ட வேலையை இன்று பிரதமர் பண்டித நேரு துவக்கிவைத்திருக்கிறார்.

பக்ரா அணைக்கட்டுக்கு உபயோகிக்கப்படவிருக்கும் சிமெண்டின் அளவு உலகத்தைச் சுற்றி ஒரு சாலை அமைக்கப் போதுமானதாயிருக்கும்.

தாமாகவே இயங்கும் இயந்திரங்கள் மூலம் மணி ஒன்றுக்கு 400 டன் சிமெண்ட் வீதம் $3\frac{1}{2}$ ஆண்டுக்கு (தினம் 24 மணி நேரமும்) அணையில் கொட்டப்படும் என்று கூறப்படுகிறது.

புதுடில்லியில் உள்ள குதப்மினரைப்போல மூன்று மடங்கு உயரமான 680 அடி உயரத்திற்கு அணை அமைக்கப்படுகிறது.

இந்த அணையினால் பஞ்சாப், பெப்சு, இராஜஸ்தான் மாநிலங்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் பயன்பெறுவார்கள். (விவரங்கள் நாளை வெளிவரும்.)

வெளிநாட்டு அந்தகருக்காக நிறுவப்பட்டுள்ள அமெரிக்க நிறுவனத்தின் 40-வது ஆண்டுவிழாவில், உடற் குறையுள்ளோருக்கு வேலை தேடும் ஐசன்ஹோவரின் குழு அந்தகரான திருமதி ஹெலன் கெல்லருக்கு விசேட கௌரவம் வழங்கியிருக்கிறது.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி.)

'எம்பிராய்டரி' வேலைக்குத் தருவது பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. சில வியாபாரிகள் போட்டியின் காரணமாக 'காண்டிராக்ட்' தொகை விகிதங்களைக் குறைத்துவிட்டதால், 'ஏஜெண்டு'களின் இலாபமும் தொழிலாளர்களின் ஊதியமும் குறைந்துவிட்டதாம்; எனவே, சர்க்கார் குறுக்கிட்டு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும் எனக் கோரப்படுகிறது."

—'தினமணி': 18—11—55

****

திராவிட மாணவ முன்னேற்றக்கழக 2-வது மாநில மாநாடு

★

19-11-55 சனி காலை 8-30 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

நடைபெறும்

★

தலைவர்: **கே. ஏ. மதியழகன்**

திறப்பாளர்: **இரா. நெடுஞ்செழியன்**

பேசுவோர்: **சி. என். அண்ணாதுரை**

என். வி. நடராசன்

ஆகியோரும், மற்றும் திராவிட மாணவ மணிகளும்.

இசைச் செல்வி ஜி. கஸ்தூரியின் இன்னிசையுடன் துவங்கும்

நன்கொடை: ரூ. 1, அணா 8

உ. பில்லப்பன், எல். லெனின், து. தீ. தயாளன் — செயலாளர்கள்; மாறன் — பொருளாளர்; டி. கே. பொன்னுவேலு — வரவேற்புக் குழுத் தலைவர்

****

பூத்தையல் தொழிலில் வடவர் ஆதிக்கம்!

'தினமணி'யின் 'சத்திய சோதனை'!

தொழிலாளரின் துயருக்குக் காரணமென்ன?

★

திருமணிக்குப்பம், நவ. 16—

"திருவள்ளூர் வட்டத்தைச் சேர்ந்த நூல் பின்னல் வேலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பதாயும், 'கம்பெனி' முதலாளிகள் தொழிலாளர் கூலியைக் குறைத்தும், வடநாட்டவரை வேலைக்கு வைத்து வேலையைக் குறைத்ததுமே இதற்குக் காரணம் என்றும், இது விஷயத்தில் சர்க்கார் தலையிட்டு தக்கது செய்யவேண்டும் என்றும் பின்னல் வேலைத் தொழிலாளர் சங்கத் தலைவர் இராகவ முதலியார் சென்னை முதன் மந்திரி தொழில் மந்திரி முதலானவர்களுக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்."

—'சு. மி': 17—11—55

★

திருமணிக்குப்பம், (திருவள்ளூர்) நவ. 16—

"சுங்குவார் சத்திரத்தையும், அதை அடுத்த கிராமங்களையும் சேர்ந்த பல நூல் பின்னல் வேலை (எம்பிராய்டரி) தொழிலாளர்கள் வேலையற்றுப் போய்விட்டதாகவும், சர்க்கார் இதனைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்றும் திருமணிக்குப்பம் பஞ்சாயத்து சபைத் தலைவர் டி. ஜி இராகவ (முதலியார்) கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"சென்னை நகரில் உள்ள வியாபாரிகளிடமிருந்து, ஏஜெண்டுகள், 'காண்டிராக்ட்' பேசி துணிகளை எடுத்துச் சென்று கிராமங்களில்

(தொடர்ச்சி 1-ம் கலம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்.
சென்னை 18-11-'55 வெள்ளி

ரஷ்யத் தலைவர்களே! வருக! வருக!

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் துவக்கத்தில் பிரான்ஸ், சில காலம் இங்கிலாந்து பின்னர் ஜெர்மனி என்று மேலைநாடுகளிலேயே அமைந்திருந்த புரட்சிக் கேந்திரத்தை, பத்தொன்பதாம் நூற்றாண்டைக் கடந்து இருபதாம் நூற்றாண்டின் நுழைவு வாயிலை காலச் சக்கரம் அடைந்தபோது, கிழக்குத் திசைக்கு இழுத்து வந்தது. ரஷ்யா அந்தப் புரட்சிக் கேந்திரமாக உருவெடுத்தது. மேலை நாடுகளிடமிருந்தே புரட்சி ஆர்வத்தைக் கிரகித்துக்கொண்ட ரஷ்யா, சிக்கிரமே பிறருக்குப் புரட்சி அனுபவங்களைக் கற்றுத் தரும் ஆசானாகவும் மாற்றது—புரட்சியில் வெற்றி பெறும் முன்பே.

தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நின்ற நாடுதான் ரஷ்யா.

சார் மன்னர் பரம்பரையின் கொடுங்கோன்மைக்கும், ரஸ்புடீன் பரம்பரையின் கொடு நஞ்சிற்கும் பலியாகி, வாழ்விழந்து, வளமிழந்து, வறுமை, வாட்டம், பசி, பஞ்சம், வேலையின்மை சுரண்டல் அடக்குமுறை இவற்றின் இறுகிய அணைப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த மக்கள்தான் ரஷ்யர்.

அந்த ரஷ்ய நாட்டில்தான், புரட்சிக் கேந்திரம் அமைந்தது. இருபதாம் நூற்றாண்டுத் துவக்கத்தில், அந்தக் கேந்திரத்திலிருந்து வெளிப்பட்ட புரட்சித் தீயின் ஒளி உலகெங்கணும் பார்க்கக் கூடியதாயிருந்தது. அந்தத் தீயிலே வெந்து மாண்டனர், கொடுங்கோலர்கள், மதமதோன்மத்தர்கள், சுரண்டல் கூட்டத்தவர், மக்கள் விரோதிகள் மற்றைய ஆகாதோர் அத்தனை பேரும்.

உயரப்பன் ஓட ஓட துரத்தப்பட்டான்—ஒடப்பனால் ஒழிக்கப்பட்டான். உயர்ந்தவன் தாழ்ந்தவன், தொழிலாளி முதலாளி, பணக்காரன் ஏழை, நிலப்பிரபு விவசாயி என்ற வேற்றுமைகள் செத்தொழிந்தன. பொதுஉடைமை பூத்தது 'எல்லாம் எல்லோருக்கும்; உழைப்போம் ஒன்றாக; ஒருசேர வாழ்வோம் நன்றாக' என்ற சமநீதி மணம் கமழத் தொடங்கிற்று.

ஏழை என்றும், அடிமை என்றும் எவெனுமில்லை என்ற நிலை மலர்ந்தது. 'சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி' என்ற சோஷலிச மணம் பிதமிஞ்சிய செடியுடன் கமழத் தொடங்கிற்று.

ரஷ்யப் புரட்சி மனித வாழ்வை புதியதோர் திருப்பத்திற்கு இழுத்துச் சென்றது. உலகில் மற்றுமோர் தேவையான-இயற்கையான புதுமை முளைத்தது.

இந்த உலகப் புதுமையைச் சமைக்க ரஷ்ய மக்கள் புரிந்த அருந்தான தியாகங்கள், இன்னும் அடிமைப்பட்டுக் கிடக்கும் திராவிட மக்கள் போன்றோருக்கு, விடுதலைப் பாதையில் ஏந்திச் செல்ல உதவும் நல்ல அனுபவ ஒளிவிளக்குகளாகும்.

மக்கள் அந்தச் சொல்லுக்குரிய உண்மையான பொருளுடன் வாழ வழிகாண சமநீதிக் கொள்கையை புரட்சியின் மூலம் அமுல் செய்த முதல் நாடு என்ற பெருமைக்குரிய அந்த ரஷ்ய நாட்டின் தலைவர்கள்-முதல்வர்கள், இன்று இந்தியத் துணைக் கண்டத்திற்கு வருகை தருகின்றனர்.

புரட்சி வரலாற்றில் கீர்த்தி மிக்க இடம் பெற்றிருக்கும் ஒரு மாபெரும் சமுதாயத்தின் மெய்க்காப்பாளர்களான ரஷ்யப் பிரதமர் புல்கானின், கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ் முதலானோர் இந்தியாவிற்கு மட்டுமின்றி, திராவிடத்திற்கும் வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

கடந்த ஜூன் திங்களில் இந்தியப் பிரதமர் நேரு ரஷ்யா சென்றிருந்தபோது விடுத்திருந்த அழைப்பிற்கிணங்க, ரஷ்யத் தலைவர்கள் இந்தியா வருகின்றனர்.

அவர்களை வரவேற்கும் கோடானுகோடி மக்களுடன் நாமும் பெருமிதத்துடன் சேர்ந்து கொள்கிறோம்.

பிற்போக்குத் தன்மையின் விளை நிலமாயிருந்த ஒரு சுரண்டல் பூமியை-அடிமை மண்ணை, பொது உடைமைப் பூங்காவாக மாற்றிய புரட்சிப் படையின் முன்னோடிகளாய் விளங்கிய ரஷ்யத் தலைவர்களை வரவேற்பதில், பழம்பெரும் பெருமையும் வீரம் செறிந்த வரலாறும், அறிவுத் திறன்மிகு பண்பாடும் கொண்ட தொன்மைமிகு திராவிட இனத்தின் அரசியல், பொருளாதார, சமுதாய விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் பெருமகிழ்வும் பேருவகையும் கொள்கிறது.

ரஷ்யத் தலைவர்கள் திராவிடத் திருநாட்டின் தலைநகரான சென்னைக்கு வரும்போது, அவர்களை இலட்சக்கணக்கான திராவிட மக்கள் கூடி வரவேற்பதில் ஐயமில்லை. அதே போலவே இதர திராவிட நகரங்களிலும் எழுச்சிமிகு வரவேற்பு நிச்சயம் இருக்கும்.

'உழைப்பவருக்கே உலகம்' என்ற பொன் மொழிக்கு இலக்கியம் படைத்த ரஷ்யத் தலைவர்களே! அடிமை வாழ்வில் அவதியுறுவோரின் விடுதலைக்கு உறுதுணையானவர்களே! புத்துலகச் சிற்பிகளே! வருக வருக என வரவேற்கிறோம்.

அயல் நாட்டு விஞ்ஞானிகளுக்கு

அமெரிக்காவில் விசேடப் பயிற்சி

அமெரிக்காவிலுள்ள ஓக்ரிட்ஜ் நிறுவனத்தில், இந்தியா, பாகிஸ்தான், எகிப்து முதலிய நாடுகளைச் சேர்ந்த 32 விஞ்ஞானிகள் 'ரேடியோ ஐஸோடோப்' நுட்பங்களை நான்கு வாரம் படித்து இத் திங்கள் 11-ந் தேதி முடித்தார்கள். இது வெளிநாட்டு மாணவருக்காக நடைபெற்றுள்ள இரண்டாவது பயிற்சி வகுப்பு. தகுதி வாய்ந்த ஆராய்ச்சியாளரும் தொழில் நுட்ப அறிஞரும் 'ரேடியோ ஐஸோடோப்பு'களைப் பயன்படுத்தும் அநுபவம் பெறுதல் வேண்டுமென்பதே இந்தப் பயிற்சியின் நோக்கமாம்.

அமெரிக்கத் தலைவர் ஐசனோவரின் 'அமைதிக் காலத்து அணுசக்தித் திட்டத்'துக்குத் துணையாக அணுசக்திக் குழுவின் ஆதரவில் இந்தப் பயிற்சி நடைபெற்றது

பல கனா ரகத் தொழில்கள் எல்லாம் அங்கே!

சில குடிசைத் தொழில்கள் மட்டும் இங்கே

சென்னை, நவ. 16—

ஏழு இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பொறியியல் தொழிற் நிலையம், 4 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலை 2 இலட்ச ரூபாய் செலவில் இரண்டு செருப்புத் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு சென்னை சர்க்கார் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பொறியியல் தொழில் நிலையம் சென்னை வால்டாக்ஸ் சாலையிலும், தீப்பெட்டித் தொழிற்சாலை பெரம்பூரிலும், செருப்புத் தொழிற்சாலைகள் இரண்டில் ஒன்று பெரம்பூரிலும், மற்றது திருவல்லிக்கேணியிலும் அமையும் என்று தெரிகிறது.

இந்தத் திட்டங்களுக்கு ஓரளவு நிதி உதவி மட்டும் இந்திய சர்க்கார் தருமாம்.

நகரிலும், மாநிலத்திலுமாக அமைக்கத் திட்டமிட்டுள்ள 15 தொழிற்சாலைகளில் இவை முதல் மூன்று என்றும், இதர பன்னிரண்டு திட்டங்களையும் சர்க்கார் பரிசீலித்துக்கொண்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

சாகுபடிப் போட்டிக்குத் தீவிர இயக்கம்

1955—56-ம் ஆண்டுக் காலப் பயிர் சாகுபடியில் போட்டிகள் நடத்தத் தீவிர இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கும்படி மாநில சர்க்கார்களை மத்திய உணவு-விவசாய மந்திரி காரியாலயம் கேட்டுக் கொண்டிருக்கிறதாம். 1955—56 காலப்பயிர் சாகுபடிக்கான போட்டிகள் இவ்வாண்டு டிசம்பர் மாத மத்தியில் எல்லா மாநிலங்களிலும் நடத்திவைக்கப்படவிருக்கின்றன. அகில இந்திய அடிப்படையில் உயர்ந்தபட்ச ஏக்கர் விகித மகசூலை விளைவிக்கும் போட்டியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 5000 ரொக்கப் பரிசும், 'கிருஷி பண்டிட்' என்ற பட்டமும் வழங்கப்படுமாம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

80 லட்சம் பேருக்கே வேலை தரும்

ரூ. 4,800 கோடி செலவிடப்படுமாம்: தேஷ்முக் தகவல்

புதுடில்லி, நவ. 16—

அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் இந்தியா முழுமையிலும் மதுவிலக்கு அமுல் செய்யப்படுமானால் அதனால் ஏற்படும் நஷ்டம் முன்பு கணக்கிடப்பட்ட ரூ 125 கோடிக்கு மாறாக ரூ. 200 கோடியாயிருக்கும் என்று இப்போது கணக்கிடப்பட்டிருப்பதாக நிதி மந்திரி தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

இரண்டாம் திட்டத்திற்கு, சர்க்கார் துறையில் ரூ. 4,800 கோடி செலவிட திட்டமிடப்பட்டிருப்பதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இரண்டாம் திட்டப்படி முன்பு 120 லட்சம் பேருக்கு வேலை கிடைக்குமென்று அறிவிக்கப்பட்டதற்கு மாறாக, இப்போது 80 லட்சம் பேருக்கு மட்டுமே புதிதாக வேலை கிடைக்கும் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

இரண்டாம் திட்டத்திற்கு வெளிநாட்டவர் நிதி உதவி எவ்வளவு கிடைக்கும் என்பதை இப்போது திட்டமாகக் கூறுவதற்கில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கைத்தொழில் அபிவிருத்திக்கு மானியம்

வட நாட்டு மாநிலங்களுக்குப் பெரும் பங்கு

கைத்தொழில் அபிவிருத்திக்காக இந்திய சர்க்கார் மேலும் மானியமாகவும், கடனாகவும் ரூ. 3,10,000 ஒதுக்கியுள்ளனர் என்று தெரியவருகிறது.

ஐந்து மாநிலங்களுக்கு இந்தத் தொகை வழங்கப்படவிருக்கிறதாம்.

சென்னைக்கு மானியமாகக் கிடைக்கும் ரூ 3,400 போக எஞ்சிய அத்தனை ரூபாயும் பம்பாய், மத்திய பிரதேசம், ஒரிசா, இராஜஸ்தான் ஆகிய நான்கு வடநாட்டு மாநிலங்களுக்குமே தரப்படுகிறது.

மருத்துவக் கல்லூரியில் இடம்பெற!

விஞ்ஞானக் கலைப் பட்டம் பெறவேண்டும்

புதுடில்லி, நவ. 16—

மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்றுக் கல்வி பெறுவதற்கு இனி, பி. எஸ். சி. பட்டம் பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும் என்ற ஒரு யோசனை குறித்து இங்கு சனிக்கிழமையன்று துவங்கவிருக்கிற மருத்துவக் கல்வி மாநாட்டில பரிசீலிக்கப் படவிருக்கிறதாம்.

இந்தியாவில் உள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரித் தலைவர்களும், இந்திய மருத்துவக் 'கவுன்சில,' இந்திய சுகாதார இலாகா, மற்றும் பல நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொள்ளுவர் என்று தெரியவருகிறது.

மருத்துவக் கல்வி பெறுமுன் பெற்றிருக்க வேண்டிய படிப்பு, மாணவர்களைப் பொறுக்குதல் இவை குறித்து ஆராய்ந்து அறிந்து கூறுமாறு நியமிக்கப்பட்ட துணைக் குழுவினர், தங்கள் அறிக்கையில், மருத்துவக் கல்லூரியில் நுழையுமுன் இந்திய பல்கலைக் கழகங்கள், அல்லது வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பி எஸ். சி. பட்டம் பெற்றவர்களாயிருக்கவேண்டும் என்று யோசனை தெரிவித்திருக்கின்றனர்.

தடை செய்தனர்

காரைக்கால், நவ. 15—

ஆப்ரேமேனன் என்பவரால் எழுதப்பட்டு, லண்டனிலும், டோரண்டோவிலும் பிரசுரிக்கப்பட்ட 'இராமனைப் பற்றியப் புனர் ஆராய்ச்சி' (ராமா ரீடோல்ட்) என்ற ஆங்கிலப் புத்தகத்திற்குத் தடை விதித்து இந்திய சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனராம்.

பூனா, நவ. 16—

மகாராஷ்டிரம், ஐதராபாத், விதர்பா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த காங்கிரஸ்தலைவர்கள் பம்பாய்மராட்டியம், குஜராத் என்று மூன்று மாநிலங்கள் அமைக்க வேண்டும் என்று காங்கிரஸ்செயற் குழுவினர் செய்துள்ள முடிவு குறித்து கூடி விவாதித்திருக்கின்றனர்.

சமாதானம் காப்பவர்களா?

லிபியாவின் வேண்டுகோளுக்கிணங்க, பிரிட்டனும் அமெரிக்காவும் ஆயுதங்கள், இராணுவச் சாதனங்கள் வழங்க ஒப்பியிருக்கின்றனவாம்.

இத்தகவலைத் தந்த லிபியப் பிரதமர் மூஸ்தாபா பென்ஹலீம், ஆயுதம் தாங்கிய கார்கள், வெடிமருந்துகள் யந்திரத் துப்பாக்கிகள் முதலியன 'எந்தவித நிபந்தனையுமின்றி' வழங்கப்படுவதாகத் தெரிவித்திருக்கிறார்.

ஐ. நா. நிறுவன பொருளாதாரக் குழு

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் ஆசிய, தூரகிழக்கு நாடுகள் பொருளாதாரக் குழுவின் 12-வது கூட்டம் அடுத்த ஆண்டு பிப்ரவரி 2-ந் தேதி பெங்களூரில் நடைபெறும்; இதற்கு 24 நாடுகளின் பிரதிநிதிகள் சுமார் 250 பேர் வருவார்கள். இப்பொருளாதாரக் குழுவின் கூட்டம், இரண்டாவதாக இப்பொழுது இந்தியாவில் கூடயிருக்கிறது.

இந்தோனேஷிய சர்க்கார்

நம்பிக்கைத் தீர்மான வெற்றி

ஜகார்தா, நவ. 16—

இந்தோனேஷியாவில் இப்போதுள்ள காபந்து சர்க்கார் ஒரு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றிருக்கின்றது.

இந்தக் கூட்டத்தை பிரதான எதிர்க்கட்சியினர் புறக்கணித்து விட்டனர்.

வாக்கெடுப்பின்போது சர்க்காருக்கு ஆதரவாக 135 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் கிடைத்தனவாம்.

கடந்த செப். 29-ந் தேதியன்று இந்தோனேஷியாவில் முதன் முதலாக நடைபெற்ற பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு, புதிய மந்திரி சபை இன்னும் அமையவில்லை. அது அமையும் வரை தொடர்ந்து வேலைகளைக் கவனிக்க அனுமதிக்குமாறு நம்பிக்கை கோரி வலதுசாரி கூட்டு மந்திரி சபை கோரியது.

இந்தத் தீர்மான விவாதத்தில் கலந்து கொள்ளாமல் மக்கள் சபையில் உள்ள எதிர்க்கட்சியினரான தேசிய கட்சியினர், கம்யூனிஸ்டுகள் 82 பேர் சபையைவிட்டு வெளியேறியிருக்கின்றனர்.

எதிர்க்கட்சியினர், ஒன்று, இந்த சர்க்கார் பதவியிலிருந்து விலக வேண்டும் அல்லது, 'ஒரு தற்காலிக அதிகாரம் பெற்றதுதான் இந்த மந்திரி சபை' என்று சர்க்கார் அறிவிக்கவேண்டும் என்று கோருகின்றனராம்.

பாலாறு தண்ணீர்த் தகராறு

ஏ. எஸ். ஐயங்கார் வேண்டுகோள்

சென்னை, நவ. 16—

'கோலாரிலுள்ள பாலாறு உற்பத்தி இடத்தை எஞ்சினீயர்கள் பார்வையிட வேண்டும்; அங்குள்ள ஏரிகள், நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றையும் அவர்கள் பார்வையிட வேண்டும் அவற்றைப் பார்வையிடச் செல்லும் குழுவில் வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களிலுள்ள ரயத்துக்களின் பிரதிநிதிகளும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்,' என்று, பாலாறு நீர் வினியோகத் தகராறு குறித்து, வட ஆற்காடு, செங்கற்பட்டு ரயத்துக்கள் சங்கத் தலைவரான ஏ. எஸ் ஐயங்கார் என்பார் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் அவர் அவ்வறிக்கையில், கடந்த செப்டம்பர் திங்களில் இது குறித்து விவாதிக்கப்பட்டதையும், மீண்டும் வருகிற டிசம்பர் திங்கள் 8, 9, 10-ந் தேதிகளில் மைசூர்—சென்னை பிரதம எஞ்சினீயர்கள் விவாதிக்க இருப்பதையும் குறிப்பிட்டு, இந்த இரண்டு பேச்சுவார்த்தைக் காலங்களுக்குமிடையே கடந்துபோன 3 மாதங்களும், மாநில புனரமைப்புக் குழுவினரது சிபாரிசுகளால் மைசூர் போன்ற மாநிலங்களிடையே ஏற்பட்ட 'கொதிப்பு' அடங்க உதவியிருக்கின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

"செப்டம்பரில் நடைபெற்றப் பேச்சுவார்த்தைகள் புள்ளி விவரங்கள் சேகரிப்பதுடன் முடிந்தது என்றாலும், அதன் பின்னர் முக்கியத் தகவல்கள் கிடைத்துள்ளதாக சென்னை அமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும், எவ்வித புள்ளி விவரங்கள் இருந்தாலும், பாலாறு நதியின் ஆரம்பப் பிரதேசங்களையும், முக்கியமாகப் பெத்தமங்கலம் நீர்த்தேக்கம், ராமசாகர் தாலுகா ஆகியவற்றைப் பார்வையிடாமல் எந்த ஒரு முடிவிற்கும் வர முடியாது. ஆனால், இவ்விடங்களைப் பார்வையிடும் விவரங்களெல்லாம், எஞ்சினீயர்கள் வேலை அட்டவணையில் சேர்க்கப்படவில்லை" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

நால்வர் மாநாடு தோல்வி!

ஜினீவா, நவ. 16—

ஜினீவாவில் கடந்த மூன்று கிழமைகளாக நடைபெற்ற பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நான்கு வல்லரசுகளின் வெளி விவகார இலாக்கா மந்திரிகள் மாநாடு, சிக்கல்களுக்கு முடிவேதும் காணாது தோல்வியுற்றது.

மாநாடு இறுதியில், நான்கு பேரும் கூடி, கூட்டு அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கின்றனர் அதில், மாநாட்டின் தோல்வி பற்றி விபரம் இல்லை.

சிக்கல்களை மீண்டும் வல்லரசுத் தலைவர்களின் சிந்தனைக்கே விட்டு விடுவதாக அறிக்கை கூறுகிறது

★

இறுதிவரை கருத்து வேற்றுமை நீங்கவில்லை

ஜினீவா, நவ 16—

கடந்த கோடையில் நான்கு பெரும் வல்லரசுத் தலைவர்கள் இங்குகூடி உருவாக்கிய சுமுக சூழ்நிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு, இப்போது கடந்த மூன்று கிழமைகளாக இங்கு நடைபெறும் நான்கு வல்லரசு வெளி விவகார இலாகா மந்திரிகள் மாநாடு முயன்று தோல்வி கண்டிருக்கிறது.

மேற்கு நாடுகள் கருத்தை ரஷ்யா ஏற்க மறுப்பதும், ரஷ்யக் கருத்தை ஏற்க மேற்கு நாடுகள் மறுப்பதுமாக, கடந்த மூன்று வாரங்களும் கழிந்துவிட்டன.

இறுதியாக விவாதிக்கப்பட்ட ரஷ்யாவிற்கும் மேற்கத்திய வல்லரசுகளுக்குமிடையே நல்லுறவும் நட்பும் ஏற்படுவதற்கு வழிகாணுவது என்ற பிரச்சினையிலும் இருதரப்பினரும் கருத்து வேறுபாடு கொண்டனர்.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் வல்லரசு வெளிநாட்டு மந்திரிகள் மாநாடு ஒரு பெரும் தோல்வி என்றே கூறப்படுகிறது.

பத்திரிகையாளருக்குத் தண்டனை!

சிங்கப்பூர் சர்க்கார் நடவடிக்கை

சிங்கப்பூர், நவ 16—

சிங்கப்பூர் சட்டசபையை அவமதிக்கிற—அல்லது சபையின் நடவடிக்கைகளைத் தவறாக எடுத்துரைக்கிற பத்திரிகையாளருக்கு ஆயிரம் சிங்கப்பூர் டாலர் அபராதம் அல்லது ஓராண்டு சிறைத் தண்டனை, அல்லது இரண்டும் சேர்த்து தண்டனை தரப்படும் என்று நேற்று முதல் புதிதாக அமுலுக்கு வந்துள்ள சட்டம் ஒன்று கூறுகிறது.

உறுப்பினர்கள் சட்டசபையில் பேசுவதற்கு பாதுகாப்பளிப்பதற்காகவே இந்தச் சட்டம் என்று கூறப்படுகிறது.

தாமோதர் திட்டத் தொழிலாளர்கள்

கல்கத்தா, நவ. 18—

'பூஜா' விழாவிற்காக, 3, 4-ம் பிரிவு ஊழியர்களுக்குத் தரப்பட்ட சம்பள முன் பணத்தை ஒரே தடவையில் வசூலிப்பதை விடுத்து, மூன்று தவணைகளில் வசூலித்துக்கொள்ள தாமோதர் பள்ளத்தாக்கு திட்ட நிர்வாகிகள் சம்மதித்துவிட்டனர் என்று தெரிய வருகிறது.

இதற்காக, தொழிலாளர் சங்கத்தின் செயற் குழுவினரில் 22 - பேர்கள் நேற்று பட்டினிப் போர் தொடுத்தனர்.

அதிகாரிகள் தங்கள் கோரிக்கைக்கு இணங்கியதின் பேரில் அவர்கள் இப்போது 'உண்ணா விரதத்தை'க் கைவிட்டனராம்.

பாகிஸ்தான் ஆயுத உதவி கோரும்!

கராச்சி, நவ. 16—

பாக்தாத் பாதுகாப்பு ஒப்பந்த நாடுகளின் மாநாடு அடுத்த கிழமையில் கூடும்போது, பாகிஸ்தான், அந்த நாடுகளிடம் இன்னும் அதிக இராணுவ உதவி கோரும் என்று கூறப்படுகிறது.

இந்த ஒப்பந்த நாடுகளான பாகிஸ்தான் பிரிட்டன், ஈரான், ஈராக், துருக்கி ஆகியவை வரும் நவம்பர் 21-ந் தேதியன்று பாக்தாத் நகரில் சந்திக்கவிருக்கின்றன

மாஸ்கோவிலிருந்து ஆங்கில இதழ்

மீண்டும் வெளிவரும்

மாஸ்கோ, நவ. 17—

'மாஸ்கோ நியூஸ்' என்று இனி ஆங்கில தின இதழ் ஒன்று ரஷ்யாவிலிருந்து வெளிவரும் என்று தெரியவருகிறது

இந்த இதழ் 1949-ல் நிறுத்தப்பட்டது.

இப்போது வெளிநாடுகளுடன் உறவு கொள்வதற்காக அமைந்துள்ள சோவியத் கலாச்சாரக் கழகத்தால் இது துவங்கி நடத்தப்படுமாம்.

அடுத்த ஜனவரியில் துவக்கும் இந்த இதழ், கிழமைக்கு இரண்டு மூன்று முறைகள் வெளியிடப்படும் என்றும் கூறப்படுகிறது.

'மாஸ்கோ நியூஸ்' என்ற இந்த இதழை நிறுவியவர் அன்னா லூயி ஸ்ட்ராப் என்ற அமெரிக்க பத்திரிகையாளராவார் இவர் 1949-ல் கைது செய்யப்பட்டு, அமெரிக்க ஒற்றர் என்று குற்றம் சாட்டப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

சேலம் மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

20—11—55 காலை: சேலம் நகரம்—சிறப்புக் கூட்டம்;
மாலை: ஒய்.எம்.சி.ஏ. திடலில் கல்லூரி மாணவர்கள் வரவேற்பு;
இரவு: பொதுக்கூட்டம்

21—11—55 காலை: மோரப்பூர்—திருமணம்;
மாலை: எடப்பாடி—பொதுக் கூட்டம்;
இரவு: திருச்செங்கோடு—பொதுக்கூட்டம்; மேட்டூர் அணை—நாடகத் தலைமை

22—11—55 மாலை: பாண்டமங்கலம் — பொதுக்கூட்டம்;
இரவு: நாமக்கல்—பொதுக் கூட்டம்

23—11—55 காலை: நீர்முள்ளிக் குட்டை—பொதுக் கூட்டம்;
மாலை: ஆனையாம்பட்டி—பொதுக்கூட்டம்;
இரவு: ஆத்தூர்—கே.ஆர்.ஆர். நாடகத் தலைமை.

ஐ. நா.-வில் இடம் பெற அனுமதி

அமெரிக்காவின் சாகசம்

ஐ. நா. நவ. 16—

ஐ. நா பொதுச் சபையில் இடம் கோரி மனுச் செய்துள்ள 18 நாடுகளையும் ஐ. நா-வில் சேர்த்துக் கொள்ள வேண்டும்; இன்றேல் எவரையும் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று ரஷ்யா கருதுகிறது.

இந்த 18 நாடுகளையும் ஐ. நா.வில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கனடா கொண்டுவருகிற திட்டத்திற்கு ஆதரவு பரவி வருவதாகக் கூறப்படுகிறது.

தனி அரசியல் குழு, இந்த 18 நாடுகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற திட்டம் குறித்து, வரும் திங்களன்று விவாதிக்கவிருக்கிறது. அப்போது நிச்சயமாக அந்த தனிக் குழு, எல்லோரையும் சேர்த்துக்கொள்வதற்கு ஆதரவாகவே தீர்மானம் நிறைவேற்றும் என்று கூறப்படுகிறது.

இந்த நிர்ப்பந்தம் ஏற்படுமுன்பாகவே பாதுகாப்புச் சபையைக் கூட்டி, அதில் இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கருதி அமெரிக்கப் பிரதிநிதி பாதுகாப்புச்சபையை கூட்டுமாறு கோரியிருப்பது பலருக்கு அதிர்ச்சியைத் தந்திருக்கிறதாம்.

18 நாடுகளில் சில கம்யூனிஸ்டு நாடுகள் என்றும், இவற்றிற்கு ஐ. நா.-வில் இடமளிக்க அமெரிக்கா சம்மதித்தால், அங்கு 'ரிபப்ளிகன்' கட்சியினர் எதிர்நோக்கியுள்ள தேர்தலில் வெற்றி பெறுவது கடினமாயிருக்கும் என்றும், கம்யூனிஸ்டு நாடுகள் ஐ. நா - வில் நுழைய அனுமதிப்பது கட்சிக்குப் பேரிடியாக இருக்கும் என்றும், அதனால் அமெரிக்காவின் நிலை இப்போது மிக 'நெருக்கடி'யானதாயிருப்பதாயும் கூறப்படுகிறது.

பாதுகாப்புச் சபையைக் கூட்டி, அதில் தனக்குப் 'பிரியமான' நாடுகளை மட்டும் ஐ. நா. - வில் நுழைய அனுமதி கோருவது என்றும், அப்போது ரஷ்யா தனக்குள்ள 'ரத்து' (விட்டோ) அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை நிராகரிக்கும் என்றும், இதனால், ஐ நா விரிவடைவதை ரஷ்யாதான் விரும்பவில்லை என்ற பழியைச் சுமத்தி தப்பித்துக்கொள்ளலாம் என்றும் அமெரிக்கா திட்டமிடுகிறதாம்.

ஆனால் ரஷ்யா, 'அனுமதித்தால் மனுச் செய்துள்ள 18 பேர்களையும் அனுமதிக்க வேண்டும்; இன்றேல் எவரையும் அனுமதிக்கக் கூடாது' என்று வற்புறுத்தும் என்று கூறப்படுகிறது.

இந்தியாவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை சர்க்கார் 1000 டன் அரிசி நன்கொடை அளிக்க முடிவு செய்திருக்கின்றனர்.

'மொழி ஆதிக்க முயற்சிகள்'

'தமிழ் நாடு' தரும் படப்பிடிப்பு!

மதுரையிலிருந்து வெளிவரும் 'தமிழ் நாடு' தின இதழ், 16—11—55 அன்று 'மொழி ஆதிக்க முயற்சிகள்' என்று தலைப்பிட்டு எழுதியுள்ள தலையங்கத்தினைக் கீழே தருகிறோம்:—

"சென்னையில் நடைபெற்ற கம்பர் கழக எட்டாவது மாநாட்டைத் துவக்கிவைக்கும்போது, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத், இந்தி மொழியைப் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்கள் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கன அல்ல என்று குறிப்பிட விரும்புகிறோம். 'எதையும் யார் மேலும் சுமத்துவதற்கு நாங்கள் (வட இந்தியர்கள்) விரும்பவில்லை; அதுவும் ஒரு மொழியைச் சுமத்துவதில் எங்களுக்கு விருப்பமே இல்லை" என்று அவர் கூறியிருக்கிறார்.

"... தலைவர் பிரசாத் கூறுவதற்கும், இந்திய அரசாங்கத்தார் செய்துவரும் இந்தி மொழி ஆதிக்க முயற்சிகளுக்கும் யாதொரு தொடர்பும் இருப்பதாகப் புலப்படவில்லை. இத்தொடர்பற்ற தன்மையை அண்மையில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் விளக்குகின்றன ரஷ்யத் தலைவர்கள் தமிழ்நாட்டிற்கு வரும்போது அவர்களுக்கு இந்தி மொழியில்தான் வரவேற்பு அளிக்கவேண்டும் என்று இந்திய அரசாங்கம் கட்டளையிட்டிருக்கிறது. வரவேற்பு நகரங்களில் நிறுவப்படவிருக்கும் மேல் வளைவு ('ஆர்ச்')களில் வரவேற்புச் சொற்கள் இந்தி மொழியில்தான் இருக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ரஷ்யத் தலைவர்களுக்கு இந்தி மொழிப் பயிற்சியே கிடையாது. தமிழ் மக்களுக்கும் இந்தி விளங்காத மொழி என்பதோடுகூட, வேண்டப்படாத மொழி என்பதையும் இந்தியப் பேரரசினர் அறிவார்கள். வரவேற்பு அளிப்பவர்களுக்கும், வரவேற்புப் பெறுபவர்களுக்கும் விளங்காத மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்ற கட்டளையின் நோக்கமென்ன? மொழி ஆதிக்கப் பிடிவாதம்தான்! இதே பிடிவாதத்தை, சென்னை நகரசபை வரவேற்புப் பத்திர மொழிஅமைப்பிலும் காட்டவேண்டுமென்று அவர்கள் முயற்சி செய்கிறார்கள். அப்பத்திரம் இந்தி மொழியில்தான் இருக்கவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள்.

"சென்னை நகரசபைத் தலைவர் ஒரு தமிழர் இந்தி மொழியில் எழுதப்படும் வரவேற்புப் பத்திரத்தை அவரால் படிப்பதற்கு இயலாது. வேறு யாராவது படித்தாலும், பெரும்பான்மையான நகரசபை உறுப்பினர்களுக்கு அது விளங்காத மொழி. அளிப்பவர்களுக்கும், அளிக்கப்படுபவர்களுக்கும் விளங்காத வரவேற்புப் பத்திரத்தின் மதிப்பை இந்தியப் பேரரசினர்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் சென்னை நகர சபையைப் பொறுத்தவரையில், வரவேற்புப் பத்திரத்தை ஆங்கிலத்திலேயே எழுதுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இதற்கு ஓர் இந்தி மொழி பெயர்ப்பு செய்தாக வேண்டும் என்று அரசாங்கக் கட்டளை கட்டாயம் தோன்றும். ரஷ்யத் தலைவர்களுக்கு அளிக்கும் வரவேற்புரைகளுக்கெல்லாம் இந்திதான் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கை இந்தியப் பேரரசினரை வலிமையாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது ஏனென்றால், இந்தியத் தலைமை அமைச்சர் ரஷ்ய நாட்டில் இந்தி மொழியிலேயே சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறாராம்; அவற்றின் ஒலிப்பதிவுச் செய்திப் படங்கள் பல நாடுகளில் காட்டப்பட்டுள்ளன. ஆங்கில மொழியில் அச்சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டிருந்தால், பல்வேறு நாட்டு மக்களுக்கு அவற்றின் பொருள் விளங்கியிருக்கும். பிறருக்கு நமது கருத்தைத் தெரிவிப்பதே மொழியின் அடிப்படையாகும். ஆனால், இந்தி மொழியாளர்களுக்கு அடிப்படையைப் பற்றிக் கவலையில்லை; மொழி ஆதிக்கம்தான் அவர்களுடைய குறிக்கோள் அக்குறிக்கோளை நமது நாட்டவர்களிடம் வற்புறுத்துவதோடமையாமல், பிறநாட்டவர்களிடமும் காட்டவேண்டுமென்பது தான் அரசினருடைய விருப்பம் இந்தியா முழுதும் இந்தி மொழியின தனியாட்சியின் கீழிருக்கிறது என்ற எண்ணத்தை ரஷ்யத் தலைவர்களின் மனதில் தோற்றுவிக்கவேண்டும் என்று அரசினர் கருதுகின்றார்கள். இது அசோகச் சக்கரச் சின்னத்தின் கீழுள்ள 'சத்தியமேவ ஜயதே' ('உண்மைக்கே வெற்றி') என்ற கொள்கையைப்புறக்கணித்ததாகும்

"'இந்தி மொழியை யாரும் சுமத்தவில்லை' என்று டாக்டர் பிரசாத் கூறியதற்கு முரணான முறையில், இந்திய அரசாங்க இரயில்வேக் குழு இரண்டு கட்டளைகளைப் பிறப்பித்திருக்கிறது. நான்கு நாட்களுக்கு முன், இரயில்வே தலைப் பலகைகளில் நிர்வாகப் பணியாளர்களைக் குறிக்கும் சொற்கள், இந்தியா முழுதும் இந்தி மொழியில் ஒரேவிதமான முறையில் அமைந்திருக்கவேண்டுமென்று ஒரு சுற்றறிக்கைப் பட்டியல் அனுப்பப்பட்டிருக்கிறது இப்பட்டியலின்படி நடக்கவேண்டுமென்று ஆலோசனை கூறுவதற்கு ஒரு முழு நேர சுற்றுப்பயண அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன், மற்றொரு இந்தி ஆதிக்கக் கட்டளை வெளிவந்துள்ளது — இரயில்வே நிர்வாகப் பணிகளில் இந்தி மொழியில் தேர்வு பெறுகிறவர்கள்தான் நியமிக்கப்படுவார்களென்றும், இத்தகைய தேர்வுகளுக்குப் பயிற்சி செய்விக்க, இந்தி மொழி பேசாத பகுதிகளிலுள்ள இரயில்வே பள்ளிக்கூடங்களிலெல்லாம் இந்தி ஆசிரியர்கள் நியமிக்க வேண்டுமென்றும் கட்டளையிடப்பட்டிருக்கிறது. முன்னர் அரசாங்கம் அளித்த உறுதிமொழியை இக்கட்டளை புறக்கணிக்கிறது. உறுதிமொழியளிப்பதும், அதைப் புறக்கணிப்பதும், இந்தி மொழியைச் சுமத்துவது அரசினர் நோக்கமல்ல என்று கூறுவதும், பின்னர் அந்நோக்கத்தை வெளிப்படையாகக் காட்டும் கட்டளைகள் பிறப்பிப்பதும், இயல்பான நிகழ்ச்சிகளாகிவிட்டன. அரசாங்கத்தின் மனம்போன போக்கி'ன் விளைவுகளைத் தமிழ் மக்களின் தலைவர்கள் ஆழ்ந்து கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டுகின்றோம்."

ரஷ்யப் பிரதமர் புல்கானின் வாழ்க்கை வரலாறு

மாஸ்கோ, நவ. 18—

சோவியத் பிரதமர் புல்கானினும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி செயலாளர் குருஷ்சேவும், ரஷ்ய நேரப்படி நேற்று காலை 4-12 மணிக்கு இந்தியாவுக்குப் புறப்பட்டு விட்டனர். இன்று பிற்பகல் 2-30 மணிக்கு டில்லி பாலம் விமான நிலையத்தில் அவர்கள் வந்திறங்குகின்றனர்.

ரஷ்யத் தலைவர்கள் இந்தியா, பர்மா, ஆப்கனிஸ்தான் ஆகிய நாடுகளில் 5,000 மைல் தூரத்திற்கு 'நல்லெண்ண சுற்றுப்பிரயாண'த்தை மேற்கொண்டுள்ளனர்.

சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டியின் நிர்வாக சபையின் உறுப்பினரும், சோவியத் ரஷ்யாவின் மந்திரி சபையின் தலைவருமான நிக்கோலாய் அலெக்ஸாண்ட்ரோவிச் புல்கானின், கம்யூனிட்ஸ்டு கட்சியிலும், சோவியத் மாநிலத்திலுமே தலைசிறந்த மாபெரும் தலைவர்.

மிஸ்டர் என். ஏ. புல்கானின், 1895-ம் ஆண்டில், இப்பொழுது கார்க்கி என்று அழைக்கப்படும் நகரில் ஒரு காரியாலய குமாஸ்தா குடும்பத்தில் பிறந்தார். 1917-ம் ஆண்டின் புரட்சிக்குப் பின்னர், அவர் கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினராக ஆனார்; அது முதற்கொண்டு அவரது வாழ்க்கை கம்யூனிஸ்டு கட்சியுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டே இருந்து வருகிறது.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சியின் வெற்றியின் விளைவாக, புரட்சிக்கு எதிரான நடவடிக்கைகளையும், நாச வேலைகளையும் ஒடுக்குவதற்காக அகில ரஷ்ய விசேட கமிஷனில் வேலை செய்வதற்காகக் கட்சியினால் என். ஏ. புல்கானின் அனுப்பிவைக்கப் பட்டார். இந்தக் கமிஷனில் இவர், 1918-ம் ஆண்டு முதல் 1922-ம் ஆண்டுவரை முக்கியமான பதவி வகித்து வந்தார்.

1922-ம் ஆண்டு முதல் 1927-ம் ஆண்டு வரையில், தேசியப் பொருளாதார சுப்ரீம் கௌன்சிலின் பல அமைப்புகளிலும் பல முக்கியப் பதவிகளில் புல்கானின் பணியாற்றி வந்தார்.

1931-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் புல்கானின், மாஸ்கோ சோவியத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1937-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ரஷ்ய சோவியத் 'கூட்டு சோஷலிஸ்ட் குடியர'சின் மக்கள் கமிஸார்களின் (இலாகாக்கள்) குழுவின் தலைவராக இவர் நியமிக்கப்பட்டார். 1938-ல் சோவியத் சோஷலிஸ்ட் ரஷ்யக் குடியரசின் மக்கள் கமிஸார்களின் (இலாகா தலைவர்கள்) குழுவின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்; அதே சமயத்தில் சோவியத் குடியரசின் அரசாங்க பாங்கி போர்டின் தலைவராகவும் இருந்து வந்தார்.

இரண்டாவது உலகப்போர் மூண்டவுடன் தீவிர சேவைக்காகப் புல்கானினைப் பல பதவிகளில் வேலை செய்யக் கட்சி அனுப்பி வைத்தது. 1941 முதல் 1944-ம் ஆண்டுக்குட்பட்ட காலத்தில் முன்னணி இராணுவக் கவுன்சிலின் உறுப்பினராக இருந்துவந்தார்; பின்னர், 'இரண்டாவது பால்டிக் இராணுவக் குழுவிலும், 'முதலாவதுபைலோ ரஷ்யப் போர் முனை'களின் இராணுவக் குழுவிலும் உறுப்பினராக இருந்துவந்தார். 1944-ம் ஆண்டில் பாதுகாப்பு அரசாங்கக் குழு உறுப்பினராகவும், சோவியத் ரஷ்யாவின் மக்கள் கமிஸார்களின் பாதுகாப்பு சபையின் துணை அதிகாரியாகவும் இவர் நியமிக்கப்பட்டார். 1953-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சோவியத் ரஷ்ய மந்திரி சபையின் துணைத் தலைவராகவும், சோவியத் யூனியன் பாதுகாப்பு மந்திரியாகவும் நியமிக்கப்பட்டார்.

1955 பிப். 8-ந் தேதி சோவியத் குடியரசின் மந்திரி சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

புல்கானின், சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராக 1934-ம் ஆண்டு முதலே இருந்து வருகிறார். 1948 பிப்ரவரியில், மத்தியக் குழுவின் அரசியல் பீரோவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; 1952 அக்டோபரில் கட்சிக் காங்கிரசின் 19-வது கூட்டத்துக்குப் பின்னர் சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழு நிர்வாக சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ரஷ்ய சோவியத் மகா சபையிலும், ரஷ்ய பெடரேஷனிலும் துணை அதிகாரியாக இருந்து வருகிறார்.

நாட்டுக்கு அவர் செய்த சேவைகளைப் பாராட்டுவதற்காகவும், இரண்டாவது உலக யுத்தத்தில் பிரதமத் தலைமையினரினால் இவருக்கு இடப்பட்ட வேலைகளை வெற்றிகரமாக நடத்திவைத்தமைக்காகவும், இவருக்கு 'சோவியத் தொழிலாள வீரர்' என்ற பட்டம் வழங்கப்பட்டதுடன், 'ஆர்டர் ஆப் லெனின்', 'ஆர்டர் ஆப் தி ரெட் பேன்னர்', 'சுவோரோவ் ஆர்டர்கள்' முதல், இரண்டாவது வகுப்புகள்,—'குருசோவ் முதல் வகுப்பு ஆர்டர்'கள் இரண்டு, 'ரெட் ஸ்டார் ஆர்டர்' கௌரவங்களும், இன்னும் பல பதக்கங்களும் வழங்கப்பட்டன.

அண்ணாதுரை சேலம் வருகை

★

கட்டிடத் திறப்பு விழா

20-11-55 காலை 8 மணிக்கு, சேலம் — அம்மாப்பேட்டை, மெயின் ரோடில், 18-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தை, தோழர் எஸ். ஏ. அன்புக்கரசு தலைமையில் தோழர் சி.என்.அண்ணாதுரை திறந்து வைப்பார்.

ஃ ஃ ஃ

சிறப்புச் சொற்பொழிவு

அன்று காலை 10 மணிக்கு, சேலம்-சித்தேஸ்வராவில், தோழர் சுடர்மணி தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாதுரை பேசுவார்.

ஃ ஃ ஃ

பொதுக்கூட்டம்

அன்று மாலை 6-30 மணிக்கு, சேலம்-விக்டோரியா மார்க்கட்டில், தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாதுரை, மற்றும் பலர் பேசுவர்.

★

திருச்செங்கோடு

வருகை

21-11-55 மாலை 7 மணிக்கு, திருச்செங்கோடு — 40-கால் மண்டபம்முன், தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் சி.என்.அண்ணாதுரை சொற்பொழிவாற்றுவார்.

எஸ். ஆர். எம். யூ. மத்திய சங்கத் தலைவர் எஸ். இராகவானந்தம் அறிக்கை

தென் பகுதி இரயில்வேமென்ஸ் யூனியன் பொதுச்செயலாளர் தன் விலகல் கடிதத்தை எனக்கு அனுப்பியமையால், அதைப் பற்றி ஆலோசனை செய்ய மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தை விழுப்புரத்தில் 6—11—55-ல் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்தேன். கூட்டுப் பொதுச்செயலாளர் மீதும், பொன்மலை, திருச்சி கிளைகள் மீதும் அவர் குற்றம் சாட்டியிருந்தபடியால், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாகவும் இருந்தது. பொதுச்செயலாளர் 29—10—55-ல் டில்லி செல்ல வேண்டியிருந்தமையால் அவரைக் கலந்து, கூட்டத் தேதி 1—12—55-க்கு ஒத்திப்போடப்பட்டது. ஒத்திப்போடப்பட்ட அறிவிப்புக் கடிதம் கூட்டுப் பொதுச்செயலாளருக்கு 4—11—55-ல் கிடைத்ததும், 5—11—55 அன்று அவர் ஒரு சுற்றறிக்கை அனுப்பி மத்திய நிர்வாகக் குழுக் கூட்டம் மண்டபத்தில் 21—11—55 தேதி நடைபெறும் என்று அறிவித்து, அதற்கான ஏற்பாடும் செய்து வருகிறார். நான் அனுப்பிய கூட்ட அறிவிப்புக் கடிதம் கிடைத்த பின் இக்கூட்டம் கூட்டப்பட்டதால், இக்கூட்டம் செல்லாது. தன்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர் செய்த ஒரு ஏற்பாடு இது என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேன். மேலும் விசேடக் கூட்டம் கூட்ட, தலைவருக்குத்தான் அதிகாரமுண்டே ஒழிய, பொதுச் செயலாளருக்கோ, கூட்டுப் பொதுச் செயலாளருக்கோ கிடையாது.

மண்டபம் மாநாட்டில் பல கிளைச் செயலாளர்கள் பேசுவார்கள் என 'விடுதலை' ஏட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. மதுரைக் கிளைத் தலைவர்கள் இருவரில் ஒருவர் சந்தா கொடுக்காமையால் தம் பதவியை இழந்துவிட்டனர். விருதுநகர் கிளை கலந்துகொள்ள முடியாதென அதன் செயலாளர் திரு. பிரகாசம் அறிவித்துவிட்டார். மதுரை கிளையும் கலந்துகொள்ளாதென அதன் தலைவர் திரு. நடராசன் தெரிவித்துவிட்டார். திரு டேவிட் என்பவர் இப்பொழுது செயலாளர் அல்லவென்றும், அவர் சந்தாகொடுக்கவில்லையாதலால் உறுப்பினராகக்கூட இல்லாமல், இப்பொழுதுதான் புதுப்பித்தார் என்றும், திரு. வேதநாயகம்தான் செயலாளர் என்றும், தலைவர் எழுதியுள்ளார். 'பெரம்பூர் கிளைச் செயலாளர் திரு. சம்பந்தம்' என்று அறிவித்துள்ளதும் தவறு. செயலாளர் திரு. முருகவேல் கூட்டிய கூட்டத்தில் திடீரென்று அவர் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லிவிட்டு, திரு. சம்பந்தம் அவர்கள்தான் செயலாளர் என அறிவிக்கப்பட்டுவிட்டது. முறைப்படி நோட்டீஸ் கொடுத்து, நிகழ்ச்சிநிரலில் குறிப்பிட்டு, கூட்டம் கூட்டித்தான் விலக்க முடியும். அப்படிச் செய்யாதபடியால் இன்னும் திரு. முருகவேல்தான் செயலாளர் பதவியை வகிக்கிறார்.

கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, சென்னை, சேலம், விருதுநகர், மதுரை, மாயவரம், திருவாரூர் ஆகிய கிளைகள் கலந்துகொள்ளப்போவதில்லை. சேலம், திருவாரூர் ஆகிய இரு கிளைகளின் தலைவர்களும் கலந்துகொண்டாலும், அது தனிப்பட்ட முறையில்தானே ஒழிய கிளையின் அனுமதியுடன் அல்ல.

ஆக, பொன்மலை, திருச்சி, மண்டபம் கிளைகளும், பெரம்பூர் கிளையின் தலைவரும், ம. ச உறுப்பினரும்தான் கலந்துகொள்ளப்போகிறார்கள். நான்கு கிளைகள் கலந்துகொள்ளும்; பத்து கிளைகள் கலந்துகொள்ளாது. 'விடுதலை'யில் விளம்பரம் பெற பொய் சொல்லப்பட்டிருக்கிறதென்று அறிவிப்பதுடன், இக்கூட்டம் செல்லாதென்றும், 21—11—55 அன்று மண்டபத்தில் எந்த முடிவு எடுத்தாலும் அது யூனியனைக் கட்டுப்படுத்தாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமெரிக்காவுக்கு எகிப்து எச்சரிக்கை

இஸ்ரேலுக்கு மேலும் ஆயுதம் வழங்குவதற்குக் கண்டனம்

வாஷிங்டன், நவ. 16—

"இஸ்ரேலுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆயுதம் வழங்குமானால், நாங்கள் மேலும் ஆயுதச் சேகரிப்பில் ஈடுபட வேண்டியிருக்கும்"

என்று எகிப்து, இன்று அமெரிக்காவை எச்சரித்திருக்கிறது.

"செக் நாடு எகிப்திற்கு வழங்கும் ஆயுதங்கள் பூராவும் கிடைத்த பிறகும்கூட, ஆயுத பலத்தில் எகிப்தை விட இஸ்ரேல் மிஞ்சியே இருக்கும்; இதைத் தெரிந்த பின்பும், அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆயுதம் வழங்குவது, அரபு நாடுகளின் நேசத்தை அமெரிக்கா விரும்பவில்லை என்பதையே குறிக்கிறது; அரபு நாடுகள், அமெரிக்காவுடன் நட்புறவு கொள்ளவே விரும்புகின்றன."

என்று, எகிப்தின் எச்சரிக்கைக் குறிப்பை அமெரிக்காவிடம் தந்த அகமத் உசேன் தெரிவித்திருக்கிறார்.

"மேலும் ஆயுதங்கள் பெற கம்யூனிஸ்டு நாடுகளிடமா செல்வீர்கள்?" என்று கேட்கப்பட்ட போது, அவர், "அவர்களிடம் தான் செல்லவேண்டுமென்பதல்ல; எங்கிருந்தெல்லாம் கிடைக்கிறதோ அங்கிருந்தெல்லாம் ஆயுதம் பெறுவோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

★

பிரதமர் நாசர் எச்சரிக்கை!

கெய்ரோ. நவ. 17—

அமெரிக்கா மேலும் மேலும் இஸ்ரேலுக்கு ஆயுத உதவி செய்வதை எகிப்து பிரதமர் நாசர் கண்டித்திருக்கிறார்.

இஸ்ரேலுக்கு இனியும் அமெரிக்கா ஆயுத உதவி செய்வது, அராபியர்களைவிட இஸ்ரேலியர் இராணுவ பலம் மிகுந்தவர்களாக இருக்கச் செய்யவேண்டி மேற்கொள்ளப்படும் பகிரங்க முயற்சி என்றும், அராபியர்கள் இஸ்ரேலுக்கு நிரந்தர அடிமைகளாக அவர்களின் மிரட்டல்களுக்குப் பயந்துகொண்டு வாழச் செய்வதாகும் என்றும், மேலும் மேலும் ஆக்கிரமிப்பு நடத்துமாறு இஸ்ரேலைத் தூண்டுவதாகும் என்றும் கர்னல் நாசர் தமது எச்சரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

திருவில்லிப்புத்தூர்

நாயர் சதுக்கத்தில்

20—11—55 இரவு 7 மணிக்கு

பேசுபவர்:

முகவை ஆர். எஸ். பாண்டியன்

★

கோட்டாம்பட்டி (மதுரை மா.)

மந்தைத் திடலில்

21—11—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: எஸ். அருணாசலம்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

மீ. சு. இளமுருகு

மாநில மாநாட்டு நிதி

அளிப்புப் பொதுக்கூட்டம்

20-11-55 மாலை 6 மணிக்கு, போளூர் பழைய பஸ் நிலையத்தில், தோழர் ப. உ. சண்முகம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, முல்லை சத்தி ஆகியோர் பேசுவர்.

சென்னை 16-வது வட்ட தி. மு. க. பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

"20-11-55 அன்று, சென்னை 16-வது வட்ட தி.மு.கழகச் சார்பில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தேதி பின்னர் அறிவிக்கப்படும்,"

என்று, தோழர் ப. ஆசைமுத்து அறிவிக்கிறார்

பெங்களூர்—பிளாக்பள்ளி தி. மு. க. உறுப்பினர்கட்கு

20—11—55 காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

பாராட்டுப் பொதுக்கூட்டம்

20—11—55 மாலை 7 மணிக்கு. மதுரை நகர் தி. மு. கழகச் சார்பில், அண்ணா திடலில், தோழர் பி கே. சேதுராமன் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். நகராண்மைக் கழகத் தேர்தலில் வெற்றிபெற்ற தோழர் எஸ். முத்து அவர்களைப் பாராட்டி தோழர்கள் சி. பி. சிற்றரசு, கே. எஸ். சந்தானம், அரசக்கண்ணனார், என். எஸ். இராசா, முனியப்பன் ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

19—11—55 மாலை 6½ மணிக்கு வடசென்னை குறள்நெறிக் கழகத்தின் சார்பில், கழகப் பணிமனையில் (59, மன்னார்சாமி கோயில் தெரு, இராயபுரம்) திரு. கி. தியாகராசன் தலைமையில் 'தமிழகமா, திராவிடமா?' என்பது குறித்து பல தோழர்கள் விவாதிப்பர்.

குறள் வகுப்பு

19—11—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 15, முத்து கிருஷ்ணன் தெருவில் நடைபெறும். 'தெரிந்து தெளிதல்' என்பது குறித்து, திரு. மயிலை சிவமுத்து, திருமதி டபிள்யூ. என். ஜெயகுமாரி ஆகியோர் பேசுவர்.

சென்னை மாணவர் மன்ற உறுப்பினர் கூட்டம்

20—11—55 ஞாயிறு மாலை 3 மணிக்கு மேல், பெத்துநாய்க்கன் பேட்டை, இரத்தின முதலி தெரு, 17-ம் எண்ணுள்ள மன்ற நிலையத்தில் நடைபெறும். அவ்வமயம் அடுத்த ஆண்டுச் செயற்குழுவினர் தேர்தல், சென்ற ஆண்டு வரவு—செலவுக் கணக்கு. தமிழ்த் தேர்வு நடத்துவது பற்றிய விவரங்கள், வெள்ளிவிழா முதலியவற்றைக் குறித்து ஆய்ந்து முடிவு செய்யப்படும்

'தூக்குமேடை' நாடகம்

19—11—55 சனி இரவு, காங்கேயநெல்லூர் புதிய கிராமத்தில், தாமரை மன்றத்தாரால் 'தூக்குமேடை' நாடகம் நடைபெறும்.

தபால்—தந்தி ஊழியர் முதல் வருடாந்திர மாநாடு

20—11—55 மாலை 4 மணிக்கு, பெங்களூர், குப்பன் ரோடு தலைமை தபால்-தந்தி நிலையத்தில், அகில இந்திய தபால் இலாகா ஊழியர்கள் (3-வது 4-வது வகுப்புக்கள்) முதல் வருடாந்திரக் கூட்டு மாநாடு சென்னை போஸ்ட்மாஸ்டர்-ஜெனரல் பி. கே. எஸ். சாரி அவர்களால் துவக்கிவைக்கப்படும். திருவாளர்கள் பி எஸ். ராஜராம ராவ், என். ஷெனாரப்பா, டி. எஸ். ராமானுஜம், சி. எம். பரிபூரணம் ஆகியோர் கலந்துகொள்வர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.